செ.வெ.எண்: 250 நாள்: 13.05.2024

**புதுக்கோட்டை மாவட்டம்**
**பத்திரிகைச் செய்தி**

---

இந்தியாவின் சுதந்திர போராட்டத்தில் தமிழர்களின் பங்கு மகத்தானது. விடுதலை போராட்டத்தில் தமிழகத்தின் தியாகத்தையும், பங்களிப்பையும் போற்றும் வகையில் சுதந்திர தின அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் 75 –வது சுதந்திர தின விழா உரையின்போது அறிவித்துள்ளார்கள்.

சென்னை மெரினா கடற்கரையின் எதிரில் பாரம்பரிய கட்டடமான ஹுமாயூன் மஹால் கட்டடத்தில் சுமார் 80000 சதுர அடி பரப்பளவில் பெரிய அளவில் இந்த அருங்காட்சியகம் அமைக்கப்படவுள்ளது. இந்த அருங்காட்சியகம் சிறப்பாக அமைந்திட அனைத்து தரப்பு மக்களின் பங்களிப்பும் தேவைப்படுகிறது.பொது மக்கள் தங்கள் வசம் உள்ள சுதந்திர போராட்டம் குறித்த பழங்கால ஆவணங்கள், கையெழுத்துப் பிரதிகள், செய்தித் தாள்கள், ஜெயில் வில்லைகள், இராட்டைகள், பட்டையங்கள், ஐ.என்.ஏ. சீருடைகள், ஐ.என்.ஏ. அஞ்சல் தலைகள் மற்றும் ரூபாய் தாள்கள் போன்ற இனங்களை நன்கொடையாக அளிக்கலாம். தங்கள் வசம் உள்ள அரிய பொருட்களை சென்னை அல்லது புதுக்கோட்டை அருங்காட்சியகங்களுக்கு நேரிடையாக சென்று வழங்கலாம். இவ்வாறு வழங்கப்படும் பொருட்களுக்கு உரிய ஒப்புகை கடிதம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் சென்னை அரசு அருங்காட்சியகங்களின் ஆணையர் அவர்களால் வழங்கப்படும்.

இவ்வாறான அரிய பொருட்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும்போது அதை வழங்கியவர்களின் பெயர்களும் இடம்பெறும். ஆகவே பொதுமக்கள் தங்களிடம் உள்ள சுதந்திர போராட்டம் தொடர்பான அரும்பொருட்களை அமையுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க அருங்காட்சியகத்திற்கு நன்கொடையாக வழங்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai